# தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை
## (நாரா நிறுவனம்)
# பதவி வெற்றிடங்கள்

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா நிறுவனம்) இலங்கையில் நீரியல் வளங்கள் தொடர்பிலான துறையில் ஆய்வு மற்றும் மேம்பாட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளும் பிரதான தேசிய நிறுவனமாகும்.

**நாரா நிறுவனம் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடமாக உள்ள பதவிக்காக குறித்த தகைமை மற்றும் அனுபவம் பெற்றவர்களுக்கு வாய்ப்பு திறந்துள்ளது.**

**பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்) (வெற்றிட எண்ணிக்கை - 01)**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமை**

***குறித்த தகைமைகள்***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகம்/ அரச நிர்வாகம்/ வர்த்தகம் அல்லது பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் வேறு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

குறித்த துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை (Post Graduate Degree) பெற்றிருத்தல் அல்லது குறித்த விடயப் பரப்புக்கு பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்திலான பதவி ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் பதின்மூன்று (13) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**பணிப்பாளர் (நிதி) (வெற்றிட எண்ணிக்கை - 01)**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

***கீழுள்ள 1 அல்லது 2 இனை பூர்த்தி செய்திருத்தல்***

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ நிதி முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகம்/ வர்த்தகம் அல்லது பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் வேறு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

    அத்துடன்

    குறித்த துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை (Post Graduate Degree) பெற்றிருத்தல் அல்லது குறித்த விடயப் பரப்புக்கு பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

    மற்றும்

    அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்திலான பதவி ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் பதின்மூன்று (13) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02. பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்புக்கு பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவம்/ பட்டய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

    மற்றும்

    அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்திலான பதவி ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் பதின்மூன்று (13) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**மேலுள்ள இரு பதவிகளுக்கும் பொது விடயங்கள்**

**சம்பள முறை :**

***சேவைத் தரத்திற்கு உரிய சம்பளக் குறியீட்டு இலக்கம் மற்றும் மாதச் சம்பள அளவு:***

HM 1-3 - ரூபா 152,500– 15 × 4,100 – 214,000

இது தவிர இந்தச் சேவைப் பிரிவுக்கு உரித்தான, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட குறித்த வேறு கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

(2027.01.01 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்காக சம்பளம் வழங்கல் முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 1/2025 இன் II அட்டவணைப்படி மேற்கொள்ளப்படும்.)

**வயது :** 35 வயதுக்கு குறையாத மற்றும் 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**நியமன பண்பு :** நிரந்தம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக உரித்துடையது.

**வேறு**

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

அனைத்து விண்ணப்பதாரர்களும் உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் உங்களது முழுமையான சுயவிபரக் கோவை, அடிப்படைக் கல்வி மற்றும் தொழில் தகைமைகளை உறுதி செய்கின்ற சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் பிறப்புச் சான்றிதழின் பிரதியுடன் 2026 ஜூலை 15 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு, மட்டக்குளி, கொழும்பு 15 என்ற முகவரிக்கு அனுப்புவதற்கு வகைசெய்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவது பின்வருமாறு.

| | |
|---|---|
| குறித்த மேலதிக அனுபவத்திற்கு | புள்ளிகள் 30 |
| குறித்த மேலதிக கல்வி/ தொழில்முறை அனுபவத்திற்கு | புள்ளிகள் 30 |
| மற்ற செயல்திறன் மற்றும் திறன்களுக்கு | புள்ளிகள் 15 |
| நேர்முகப்பரீட்சையில் செயல்திறன் | புள்ளிகள் 25 |
| மொத்த புள்ளிகள் | 100 |

அரச, சட்டரீதியான சபை, கூட்டுத்தாபனம் அல்லது திணைக்களங்களின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவன தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, நிறுவன தலைவர் மூலம் அனுப்பப்படாத, தாமதித்து கிடைக்கின்ற, முழுமை பெறாத, தெளிவற்ற அல்லது வேறு ஏதேனும் தேவை ஒன்றை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை**
**காக்கை தீவு,**
**மட்டக்குளி, கொழும்பு 15**
**011-2521000/ 2521006**
**(www.nara.ac.lk)**